# வாழ்க்கை என்பது என்ன?

வில்லியம் டப்ளியூ. ஓர்.

222
ஓர்
SL/PR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

292
9ர
ஓர்

# வாழ்க்கை என்பது என்ன?

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வில்லியம் டப்ளியூ. ஓர்.
A. B., M. A., Th. B., D, D.

கலாநிதி ஓர் என்பவர் கலிபோர்னியா, டெம்பிள் சிற்றி வானெலி வேதாகமப் பாடசாலே ஆசிரியரும், நூலாசிரியரும் ஆவர்.

24973

(திருப்திகரமான ஒரு விடை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**WHAT IS LIFE ALL ABOUT**

BY

WILLIAM W. ORR

Published by PRAGNA PUBLISHERS and Printed at Liberty Press, No. 478, Bloemendhal Road, Colombo 13.

# பொருளடக்கம்


வாழ்க்கைப் பிரச்சினைகள் ... ... ... 3

இதுதான் விடயா...? ... ... ... 6

இறைவன் ஞானமுள்ளவர் ... ... ... 10

இறைவன் மகத்தானவர் ... ... ... 13

இறைவன் தந்த நூல் ... ... ... 16

இறைவனின் நூலே இறைவனின் திட்டம் ... 19

திட்டத்தின் ஆரம்பம் ... ... ... 22

பாவம் நுழைகிறது ... ... ... 25

பாவம் துயரம் தருகிறது ... ... ... 28

இயேசு வருகின்றார் ... ... ... 30

அவர் தம் உயிரைக் கொடுக்கின்றார்... ... ... 33

இன்றைய உலகுக்கு இறைவனின் திட்டம் ... 36


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை என்பது என்ன ?

இதோ உங்களுக்கு ஒருசில கேள்விகள் :

வாழ்க்கைக்கு ஒரு காரணம் உண்டா?

வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் உண்டா?

பரந்த, பாரிய இப்புவியில் நாம் வாழும் நோக்கத்தை அறிய முடியுமா?

இப்புவியில் நாம் நிறைவோடு இருக்கின்றோம் என்பதற்குச் சந்தேகமில்லை. பெரிய குடும்பசமேதரராய் இருக்கிறோம் ஏன்?

நாம் எங்கிருந்து வந்தோம்?

இங்கு ஏன் இருக்கின்றோம்?

இங்கிருந்து எங்கு போவோம்?

விஞ்ஞானி எம்மை சிந்திக்கும் பிராணி என்கிறான். அதாவது நாம் சிந்திக்கும் ஆற்றல் படைத்தவர்கள். மற்றெல்லா சிருஷ்டிகளும் பகுத்தறிவில் எம்மைவிடக் கீழானவையே; அவற்றைப் பொறுத்தளவில் அவை விவேகமுடையவையே. அவையும் தொடர்ந்து வாழுகின்றன, அவற்றின் நோக்கத்தை நிறைவேற்றுகின்றன: இனத்தை விருத்திச்செய்கின்றன. ஆனால் அவற்றால் சிந்திக்க முடிவதில்லை. அவை ஏன் இவ்வுலகில் இருக்கின்றனவென்று அவற்றிற்கேத் தெரியாது. ஆனால் எமக்குத் தெரியுமா?

சிந்திப்பதுதான் எமது பிரச்சினை. எமக்கு அற்புதமான விவேகமுண்டு. எமக்குச் சிந்திக்கும் ஆற்றலைத்தரும் ஒன்றோடொன்று பின்னப்பட்ட, நுணுக்கமான கோடானுகோடி அணுக்கள் எமது மூளையில் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மால் சம்பவங்களை அவதானிக்க முடிகிறது; உண்மைகளைப் பகுத்தறிய முடிகிறது; சம்பவத் தொடர்களை ஆராய்ந்தறிந்து விளைவுகளை முன்கூட்டியே அறிவிக்க முடிகிறது; கடந்தகால நிகழ்ச்சிகளை நினைவுக்குக் கொண்டுவர முடிகிறது. நடக்கப்போவதை அறிந்து அதற்கு ஆயத்தம்செய்ய முடிகிறது. இரண்டையும் இரண்டையும் ஒன்றுசேர்த்து நாலாக்க முடிகிறது. நெருப்புச் சுடும், நீர் பள்ளத்தை நோக்கிப் பாயும், சர்க்கரை இனிக்கும் என்பதெல்லாம் எம் நினைவில் இருக்கின்றது.

ஆனால், எமது சிந்திக்கும் ஆற்றலை, எல்லாவற்றிலும் பார்க்கச் சிறந்த முறையில் பயன்படுத்துவதும், நாம் எதிர்நோக்கும் அதிபெரியச் சவாலும் வாழ்க்கையைப்பற்றிய கேள்விக்கு விடையளிப்பதே வாழ்க்கை என்பது என்ன? மற்றெல்லாவற்றிற்கும் அத்திவாரம் இதுவே. பின்னால் வருவன அனைத்திற்கும் ,'ஏன்'' என்ற வினாவை எழுப்புவது இதுவே. மற்றெதுவும் இதைவிட முக்கியமானதல்ல.

எனினும் அநேகர் இக்கேள்வியைப்பற்றிச் சிந்தனை செய்யாதிருப்பது வருத்தத்திற்குரியதே. ஆயிரத்தொரு எண்ணங்கள் அவர்கள் மனதில் அலைமோதிக்கொண்டிருக்கின்றன. சங்கக் கடைக்குப் போகவேண்டும், சாமான் வாங்கவேண்டும்; பிள்ளையை பள்ளிக்கூடம் கூட்டிச்செல்ல வேண்டும் என்று இவர்கள் மனதில் எத்தனை எத்தனையோ எண்ண அலைகள்.

வாழ்க்கையின் ஓரத்திற்கே வந்ததன்பின் வாழ்க்கையைப் பற்றி சிந்தித்து என்ன பயன்? ஓட்டப்பந்தயத்தில் எவ்வளவுதான் வேகமாக ஓடினாலும் வழி தவறி ஓடுவதால் என்ன நன்மை? செல்வத்தைச் சேகரித்து அதனைக் கள்வருக்குப் பறிகொடுத்துவிட்டால் என்ன இலாபம்?

விடை காண்பதற்கு நள்ளிரவுவரைக் காத்திருக்க வேண்டாம். விளக்கம் பெறுவதற்கு விடியும்வரைப் பார்த்திருக்க வேண்டாம். இப்போதே செயற்படுங்கள், இன்றே சிந்தியுங்கள், வாழ்க்கையின் இரகசியத்தை உடனடியாகக் கண்டுபிடியுங்கள் உங்களால் நிச்சயமாக முடியும்.



# வாழ்க்கைப் பிரச்சினைகள் ......

இப்புவியில் மற்றெந்த உயிரினத்துக்கும் இல்லாத வல்லமை மனிதனுக்குண்டு. அவன் ஒரு பகுத்தறிவாளி. உலகம் உண்டாக்கப்பட்டதன் நோக்கத்தை அவன் விளங்கிக்கொள்ளக்கூடும். ஆதலின் வாழ்க்கை என்றால் என்ன என்று அறிந்துக்கொள்வதற்கு மனிதனுக்கு உரிமை உண்டு என்று அவனது விவேகம் அவனுக்கு எடுத்துரைக்கின்றது. மனிதன் இதனைத் தெரிந்துக்கொள்வதற்கான ஆற்றலைத் திருப்திபடுத்தாத எந்தவொரு வாழ்க்கைத் தத்துவ முறையும் சரியானதோ, முறையானதோ, பூரணமானதோ அல்ல.

கடல் ஏன் நிலத்தை மூடி மறைக்கவில்லை? ஆறுகள் ஓய்வு ஒழிச்சலின்றி ஓடிக்கொண்டிருப்பினும் கடல் நிறைந்துப் போவதில்லையே, ஏன்? விவசாயத்தின் புதிருக்கு விடை என்ன? நிலத்தில் புதைக்கப்பட்ட விதை கீழ் நோக்கி வளராமல் மேல் நோக்கி வளர்வது ஏன்? பறவைகளுக்கு அவற்றின் கூடுகளை அமைக்கக் கற்றுக்கொடுத்தது யார்? சிலந்திக்கு வலை பின்னக் கற்பித்தது யார்? கரிய இருளிலும் பொருட்களைக் கண்டுணரும் ஆற்றலை வௌவாலுக்கு அளித்தது யார்? ஆமை அதன் பொறியியல் திறமையைப் பெற்றது எப்படி? மயிலுக்கு ஒளிவீசும் ஒயிலான தோகையை அளித்தது யார்? அன்னம் நீரில் மிதப்பதற்கு அதன் பாதத்தில் ஒரு விசித்திர அமைப்பை ஏற்படுத்தித் தந்தது யார்? இதுபோன்ற இன்னும் எத்தனையெத்தனையோ படைப்பின் விசித்திரங்களைக் கவனியாமல் இருந்துவிடமுடியாது. இவை பொதுவானவை என்றாலும் இப்படைப்புக்களில் பின்னிப் பிணைந்திருக்கும் புதுமைகளையும் விசித்திரங்களையும் கண்டு நாம் ஆச்சரியப்படவில்லையா? இத்தனை அற்புதங்களையும் செய்வதற்கு ஏதோ ஒரு சக்தி இயங்கிக்கொண்டிருக்கிறது எதற்காக?

கதிரவனுக்கும் பூமிக்கும் இடையிலான தூரத்தைச் சரியாக அளந்து வைத்தது யார்? மாரியென்றும் கோடையென்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தைத் திட்டமிட்டு வைத்தது யார்? சோலை நிறைந்த இரம்மியமான வசந்தத்தையும் இனிமையான இலையுதிர்க் காலத்தையும் எமக்களித்தது யார்? வானத்திற்கு வர்ண ஜாலத்தைக் கொடுத்தவர் யார்? இரவும், பகலும், மாறிமாறி வரவேண்டும் என வகுத்து வைத்தது யார்? தண்ணொளி வீசும் வெண்ணிலவை எமக்குத் தந்தது யார்? விண்ணிற் தோன்றும் எண்ணற்ற தாரகைகளை எண்ணி வைத்தது யார்? அவற்றை அந்தந்த இடத்தில் கச்சிதமாக அளந்துவைத்தது யார்? ஒளிக்கும் ஒலிக்கும் இடையில் ஓர் அற்புதமான இணைப்பைக் கொடுத்தது யார்?

"யார்" "யார்" என்ற ஒரே சொல்லை இங்கு பலமுறை பயன்படுத்தியுள்ளேன். இன்னும் ஒரு முறை பயன்படுத்த விரும்புகிறேன். இவை அனைத்துக்கும் பொறுப்பானது யார்? இவை தாமாகவே அமைந்தவை அல்ல. இவை ஒவ்வொன்றுக்கும் ஓர் ஒழுங்கும் திட்டமும் உள்ளன. ஒரு சிறு புல்லிற்கூட எத்தனைப் பொறியியல் நுணுக்கங்கள் இருக்கக் காண்கிறோம். சிறுமை படைத்த ஓர் எறும்பின் அன்றாட வாழ்க்கையில்கூட எவ்வளவு ஒரு ஒழுங்கு இருப்பதைக் கண்டு நாம் ஆச்சரியப்படவில்லையா? ஆனால் அந்த ஒழுங்கை அமைத்தது யார்? ஏன் அமைக்கப்பட்டது?

இவ்வுலகம் பல்வேறு இன மக்களால் நிறைந்துள்ளது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான குண இயல்பு உண்டு. ஒரேவிதமான குண இயல்புடைய இருவரைக் காண முடியாது. உலகில் கோடானு கோடி மக்கள் வாழ்ந்தபோதிலும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமானவர்களே. உடலால், உருவத்தால் வேறுபட்டிருப்பது மட்டுமல்லாமல் உள்ளத்தாலும் வேறுபட்டிருக்கிறார்கள்.

சேற்றில் மலர்ந்த செந்தாமரையைப் போல், ஏன் சில பெருந் தலைவர்கள் ஏழ்மைக் குடிசைகளில் பிறக்கின்றார்கள்? ஒரு செல்வந்தரின் பிள்ளை ஒரு புல்லனாக மாறுவது ஏன்? ஒரு சில ஆண்களும் பெண்களும் தன்னலத்தைத் துறந்து, உலக இன்பங்களை மறந்து வறியவர்கள் மத்தியிலும் பிணியாளர் மத்தியிலும் பணி புரியச் செல்வது ஏன்? ஒருசிலர் சிரமமான பணிகளைக்கூட சிரமேற்கொண்டு சேவைப் புரிவதற்குத் தூண்டு



கோலாய் இருப்பது என்ன? உயர்ந்த இலட்சியங்கள் எங்கிருந்து வருகின்றன?

நித்திய வாழ்க்கை உண்டென்ற நம்பிக்கை எங்கிருந்து உதிக்கின்றது?

காட்டில் வாழும் ஆதிவாசிகள்கூட மறு உலகை நம்புவது எப்படி என்று கூற முடியுமா? எவருமே கடவுளைக் கண்டில்லாத போதிலும்கூட, கடவுள் என்றொருவர் இருக்கிறார் என அனைவரும் விசுவாசிப்பது எப்படி? காட்டுமிராண்டிகள்கூட மோட்சம் என்று ஓரிடம் இருப்பதாக நம்புகிறார்களே, இதை அவர்களுக்கு சொல்லிக் கொடுத்தது யார்?

ஓர் இளம் பெண் தாய்மை அடையக் கற்றுக் கொடுத்தவர் எவரும் உளரோ? அவளது தாயுள்ளத்தில், தான் பெற்றெடுத்த அன்புச் செல்வத்தின் மீது அளவற்ற அன்பையும் பாசத்தையும் அடைத்து வைத்தது யார்? அவள் தனது பிள்ளைக் கனியமுதை பாதுகாப்பதற்கு தன் உயிரையும் கொடுக்க முன் வருகின்றாளே, எப்படி?

ஆண்கள் தாயாவதில்லை, ஆனால் சிறந்த தந்தையர்கள் ஆகின்றார்கள். ஏன்? ஆண்கள் ஏன் காலைமுதல் மாலைவரை பாடுபட்டுழைத்து, தங்கள் குடும்பங்களுக்குத் தேவையான சகலத்தையும் தேடிவருகின்றார்கள்? கொழுகொம்பாக ஆணையும் அவனைத் தழுவி நிற்கும் கொடியாகப் பெண்ணையும் நியமித்தது யார்?

இவையாவும் பெரிய வினாக்கள். மேலெழுந்தவாரியாக மட்டுமே இவற்றை நான் எடுத்துக்காட்டியுள்ளேன். ஆனால் இந்த வினா ஒவ்வொன்றுக்கும் விடை யளிக்காத வாழ்க்கைத் தத்துவம் பூரணமற்ற ஒரு வாழ்க்கைத் தத்துவம் ஆகும்.

இப்படியான விடையின் முக்கியத்துவத்தை நாம் அளவுக் கதிகமாக மதிப்பீடுசெய்ய முடியாது. இது வாழ்க்கையையும் கடந்துச் செல்கிறது. நாம் நித்தியத்தைப் பற்றியும் சிந்திக்கிறோம். வாழ்க்கையின் காரணத்தை நீங்கள் அறிந்துகொண்டால், நித்தியத்தின் இரகசியத்தையும் தெரிந்துகொள்வீர்கள். ஏனெனில் வாழ்க்கையும் நித்தியமும் ஒன்றோடொன்று தொடர்புடையது. ஒன்று மற்றதுக்கு இட்டுச் செல்லுகிறது, மற்றது முன்னையதை விளக்குகின்றது. ஆனால் இரண்டிற்கும் விடை ஒன்றே. இரண்டும் ஒன்றாகவே நேர்க்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுதான் விடையா?

மகா ஞானம் பொருந்திய, மகத்தான நித்திய கடவுள் ஒருவர் இருக்கின்ருர். சர்வலோகத்திலும் கடவுளால் முடியாதது ஒன்றுமில்லை. அவர் அத்தனை மகத்தானவர். முக்காலத்தினதும் அளவிட முடியாத ஞானத்தை கடவுள் தமது உள்ளங்கையில் வைத்துள்ளார், அவர் அத்துணை ஞானம் படைத்தவர். கடவுள் அன்றும் இருந்தார், இன்றும் இருக்கின்ருர். என்றும் இருப்பார். அவர் அத்துணை நித்தியமானவர். இவ்வளவு வல்லமை படைத்த இறைவனின் திட்டத்தில், மனிதனின் பிரச்சினை ஒவ்வொன்றிற்கும் விடை கிடைக்காமற் போய்விடுமா?

இத்துணை வல்லவராகிய கடவுள் ஒருவர் இருக்கின்ருர் என நாம் விசுவசிக்கிருேம் என்பதில் சந்தேகமில்லை. நுணுக்குக் காட்டிக் கண்ணுடியும், தொலை நோக்கும் கண்ணுடியும் எமக்கு வெளிப்படுத்தும் எண்ணிலடங்காத அற்புதங்களைக் காண்பதும் அவை தாமாகவே நிகழ்கின்றன என நம்புவதும் இயலாத காரியம். இதற்குமுன் என்னதான் பிரச்சினைகள் இருந்தாலும, மகா ஞானமும் வல்லமையும் பொருந்திய இறைவன் இவற்றின் மத்தியில் வந்ததும் இவையாவும் மாயமாய் மறைந்துபோகின்றன. இப்படியான இறைவன் ஒருவர் இருக்கின்ருர் என நாம் விசுவசிக்கிருேமா?

"காரணமும் விளைவும்" என்ற பிரபல்யமான விதியைப் பற்றி சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இந்த விதி நிறைவேறுவதைப் பற்றிய சந்தேகம் எவருக்கும் எழுவதில்லை. நீங்கள் உங்கள் கையில் அணிந்திருக்கும் கடிகாரம் ஒரு விளைவாகும், இது விவேகத்தினதும், தயாரிப்பினதும் உற்பத்தியாகும். திறமையும் தொழிலும் அதற்கு உருவத்தைக் கொடுத்தன. இதனை எம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.



உங்கள் இல்லமும் இதுபோன்றதே. காரணத்தில் அடங்குவன, கட்டடக்கலை, ஒப்பந்தக்காரர், தச்சர், மின்னியலாளர், குழாய்த் தொழிலாளர், தோட்டக்காரர் மற்றும் பலர். உங்கள் இல்லம் தன்னுலேயே தோன்றிய ஒன்றென்று கூறும் அளவு மூடர் எவருமில்லை. காரணம் இல்லாமல் விளைவில்லை.

இப்பொழுது உங்கள் உள்ளத்தை உயர்த்தி, பரந்து விரிந்து, தவழ்ந்து உலாவும் சிக்கலான சர்வ லோகங்களைப்பற்றி சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இவை சீராக இயங்குகின்றன. நாமறிந்த மிகப்பெரிய விளைவு இதுதான். இதில் விவேகத்தின் நிறைவைக் காணலாம். இது எங்கிருந்து வந்தது? இது தானுக ஏற்பட்ட ஒன்ரு? ஒருவர் அதற்குக் "காரணமாக" இருந்தார். அந்த ஒருவரே கர்த்தர்.

இன்னுமொரு மகத்தான தத்துவம் வருகிறது. கலைஞன் இல்லாது கலை இல்லை. சுவரில் வரையப்பட்ட ஓவியம் ஓவியனையே காட்டுகிறது. உங்கள் ரேடியோ பல்லாண்டு கால ஆராய்ச்சியையடுத்தே உருவாக்கப்பட்டது.

ஆனல் நாம் வாழும் இந்தப் பிரமாண்டமான பிரபஞ்சத்துடன் ஒப்பிடும்பொழுது, மனிதனுல் உருவாக்கப்பட்ட இந்த இயந்திரங்கள் எம்மாத்திரம்? நாம் சுவாசிக்கும் காற்று மனிதனதும் மிருகங்களினதும் சுவாசப் பைகளுக்கு ஏற்றபடி கச்சிதமாக அமைந்துள்ளது. வானத்திலிருந்து விழும் மழை நீர் செழுமையைத் தருகிறது.

நேர்மையாகச் சொல்லுங்கள். விண்வெளியை நோக்கும் பொழுது அல்லது உங்கள் இல்லத்தின் கொல்லைப்புறத்தையாவது நோக்கும்பொழுது எல்லாம் வல்ல கர்த்தர் ஒருவர் இருக்கிருர் என்ற எண்ணம் உங்களுக்குத் தோன்றவில்லையா?

இன்னும் சற்று ஆழமாகச் சிந்திப்போம். உயிர் என்னும் ஒரு தன்மை எமக்குண்டு. இதனை நாம் உருவாக்கவில்லை, இதனைப் பிரித்தெடுக்கவோ, தயாரிக்கவோ எம்மால் முடியாது. இதனைப் பகுப்பர்ய்வு செய்வதற்கு விஞ்ஞானிகள் எத்தனையோ ஆண்டுகளாக ஆய்வு கூடங்களில் முயன்று வந்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அவர்கள் எங்கு ஆரம்பித்தார்களோ அந்த இடத்திலிருந்து ஒரு அணுவளவுகூட முன்னேறவில்லை. ஆனால் ஒவ்வொருவர் கையிலும் உயிர் இருக்கின்றது. அது இல்லாமல் ஒன்றுமே இல்லை.

அப்படியாயின் அது எங்கிருந்து வந்தது?

இறைவன் உயிராகவுள்ளார். உயிர்கள் யாவும் அவரிடமிருந்தே தோன்றின என வைத்துக்கொள்வோம். இதனை விசுவாசிப்பது கடினமாக இருக்கின்றதா? இறைவன் மகத்தானவராக, ஞானம் நிறைந்தவராக, வல்லமை நிறைந்தவராக இருந்தால் நாம் ஏன் எமது மூளையைப்போட்டுக் குழப்பிக்கொள்ள வேண்டும்? நாம் அறிந்த எந்தவொரு மூலகத்திலிருந்தும் உயிர் உருவாகவில்லை.

எமக்கு ஒரு மனச்சாட்சி உண்டு. இது தீமையை வெறுத்து நன்மையை விரும்பச் செய்கிறது. இதனையும் நாமாகவே ஏற்படுத்துவதில்லை. இது குழந்தைகளுக்கும் உண்டு.

கீழேயிருப்பது, எப்பொழுதும் மேலே இருப்பதிலிருந்துதான் வருகிறது என்பது ஒரு பொது விதி. இது எப்பொழுதுமே மாறுபடுவதில்லை. அப்படியானால் மனச்சாட்சியையும் யாரோ ஒருவர்தான் எம்முள்ளத்தில் புகுத்தியிருக்கின்றார். அதாவது மனிதனிலும் பார்க்க உயர்ந்த ஒருவரிடமிருந்துதானே வந்திருக்கின்றது. இந்த உலகில் மற்றெல்லாவற்றையும்விட உயர்ந்த நிலையில் இருப்பது மனிதனே. ஆதலால், அந்த உயர்ந்த ஒருவர் கடவுள் என்று அறிவோம்.

கடவுளை விசுவாசிப்பதற்கு உங்களுக்குச் சிரமமாயிருக்கிறதா? சிரமம் இருக்கக் கூடாதே. ஏனெனில், கடவுள் இருக்கின்றார் என்ற அந்தச் சிறிய உண்மையை ஏற்றுக்கொள்வதில்தான் வாழ்க்கையின் உண்மை தங்கியுள்ளது. கடவுளை அறியும்பொழுது உங்கள் உள்ளத்தில் அமைதி நிலவுகிறது; சொல்லொணாத திருப்தி உண்டாகிறது. சிக்கல் நிறைந்த வாழ்க்கைப் பிரச்சினைகள்யாவும் இங்குதான் மறைந்து போகின்றன. இறைவன் உங்கள் இதயத்தைத் தமக்காகவே படைத்தார். அதன் நடுவில் தம்மால் மாத்திரமே நிரப்பக்கூடிய ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தினார்.



வாழ்க்கையே ஒரு கேள்விக்குறியாக இருப்பது எமக்குத் தெரியும். பற்பல கேள்விகளால் வாழ்க்கை நிறைந்துள்ளது. இவற்றுள் சில பெரியவை, பாரமானவை, மனித இதயத்தால் தீர்க்க முடியாத அளவு ஆழமானவை. விண்வெளியை நட்சத்திரங்களால் நிரப்பிய அதே இறைவன்தான் எமது வாழ்க்கையையும் நித்தியத்தையும் அளிக்கின்றார் என்பதனை நினைத்துப் பார்க்கும்பொழுது சஞ்சலம் நிறைந்த எம் உள்ளத்திற் சற்று ஆறுதல் நிலவுகிறது.

கர்த்தர் மகா வல்லமை பொருந்தியவராக இருக்கும்பொழுது எந்தப் பிரச்சினையும் எமக்குப் பெரிதாகத் தோன்றுமா? எந்தச் சிரமமான விடயமும் எமக்குச் சிக்கல் நிறைந்ததாக இருக்குமா? இப்படியான கேள்விகள் எழுவதற்கு அவரது ஞானம் இடங்கொடுக்குமானால் அவற்றிற்குத் தீர்வுகாண்பதற்கு அவரிடம் திட்டம் ஒன்று இல்லாமற் போகுமா?

அப்படியாயின் வாழ்க்கை என்பது என்ன? வாழ்க்கை என்பது கடவுளைப்பற்றியது ... அவரின் திட்டத்தைப்பற்றியது... அவரது நோக்கத்தைப்பற்றியது . அவரது மகிமையைப்பற்றியது என்பதனைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளலாமா? அவருடைய அருளின் மூலம், அவரது சிருஷ்டிகளாகிய நாம், எமக்கு வேண்டுமானால் இதற்கான விடையைக் கண்டுகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் ஞானமுள்ளவர்......

நான் இதனை நிதானமாகவே கூறுகிறேன். இறைவனின் ஞானத்திற்கு ஆதாரமாக அவரது சர்வலோகத்தில் கோடானு கோடி சான்றுகள் உள்ளன.

பெரியதோர் உதாரணமாக மலைகளை எடுத்துக்கொள்வோம். அவை முரடானவை; அழகும் சோபையும் கொண்டவை. எனினும் மலைகள் இல்லாவிடில் வாழ்க்கைக்கே ஒரு பெரும் முட்டுக்கட்டை ஏற்பட்டுவிடும் என்பதை அறிவீர்களா? உலகம் ஒரு வனாந்தரமாக இருக்கும். அல்லது அது சதுப்பு நிலமாக இருக்கும். செழுமையான பள்ளத்தாக்குகளுக்கும் வாழ்க்கைக்கும் மலைகள் இன்றியமையாதவை.

பனிப் படலங்களால் அரவணைக்கப்பட்டிருக்கும் மலை முகடுகளைக் கண்டிருக்கின்றீர்கள். பார்ப்பதற்கு அவை ஒரு எழிற் தோற்றத்தைத் தருகின்றன. ஆனால் அவை அதைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. பள்ளத்தாக்கின் வழியே மெதுவாக வழிந்து சென்று கோடைப் பருவத்தின் கொடிய உஷ்ணத்தில் உயிரூட்டும் ஈரலிப்பைத் தருவதற்காகவே இப்பனிப்படலம் காணப்படுகிறது. பாருங்கள் எவ்வளவு ஒரு விவேகமான படைப்பு! எவ்வளவு ஒரு பாரிய பொறுப்பு!

எறும்பின் வாழ்க்கை முறையை சற்று அவதானித்துப் பாருங்கள் என்று முன்பு ஒரு பெரும் அறிவாளி கூறினார். இச் சின்னஞ்சிறு பிராணி கைத்தொழிலில் ஒரு புலி. எறும்புகள் தம் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதும் அவற்றின் கூட்டத்தைப் படைப்பதும், படைகளை நியமிப்பதும் களஞ்சியங்களில் இரையை சேகரித்து வைப்பதும் குஞ்சுகளை அன்புடன் பராமரிப்பதும் குறிப்பிட்ட ஒரு ஒழுங்கு முறையில் வாழ்க்கையை நடத்திச்



செல்வதும் எமக்கே ஆச்சரியத்தைத் தருகிறது. எறும்பு இந்த அறிவை எங்கிருந்து பெற்றது? நிச்சயமாக, கல்லூரிகளிலிருந்தோ பல்கலைக் கழகங்களிலிருந்தோ அல்ல. அப்படியாயின் எறும்புக்கு நேர்மையான சிக்கனத்தையும் நிர்வாகத் திறமையையும் கொடுத்தது யார்?

சிட்டுக் குருவியைச் சற்று உற்று நோக்குங்கள். இக்குருவி மணித்தியாலம் 75 மைல் தூரம் பறக்கும் ஆற்றல் கொண்டது. அதனால் ஒரு அடி கூட நடக்க முடியாது, எனினும் எவ்வளவு திறமையாகப் பறக்கிறது.

புதுமையான இப்பறவையைப் படைத்தவர் எவ்வளவு கைதேர்ந்த ஒரு கலைஞனாக இருக்கவேண்டும் என்பதனைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். அவர்தான் கர்த்தர். எல்லாப் பறவைகளையும் படைத்தவர் இவரே. இவர் படைத்த பறவையினங்கள் எண்ணிலடங்கா. இவை ஒவ்வொன்றும் அதனதற்குரியத் தனிச் சிறப்பைப் பெற்றவை. இவை அனைத்தும் அவற்றின் சிருஷ்டியினுடைய ஞானத்தை நன்றியுணர்வோடு பாடித் திரிவதை நாம் காணலாம்.

சாதுவானப் பசுக்களுக்கு மிகவும் சிக்கலான ஒரு சீரண முறை இருப்பது உங்களுக்குத் தெரியுமா? ஒரு வயிறு இருக்கும் இடத்தில் இவற்றிற்கு நான்கு வயிறுகள் உள்ளன. மனிதனுக்கு இறைவன் அளித்திருக்கும் உணவாகிய பசும்பால் உற்பத்தியாவதற்கு அவர் வகுத்த வழியே இது.

ஒரு முறை மென்று விழுங்கிய புல்லை, பசு பின்னர் அமைதியாக, மெதுவாக அசை போடுவதைப் பார்த்திருக்கின்றோம். ஏன் இப்படி அசைப்போடுகின்றது. எமக்குத் தேவைப் படும் பாலைத் தருவதற்கன்றோ?

இந்த நான்கு வயிறுகளும் இயங்கும் விந்தையைப் பாருங்கள். பாலை மாத்திரம் உணவாகக் கொள்ளும் இளங் கன்றாக இருக்கும் பருவத்தில் முதலாம் வயிறு பயன்படுத்தப்படுகிறது. முழு வளர்ச்சி பெற்று வைக்கோலை உண்ணும் பருவத்தில் இரண்டாம் வயிறு தானாகவே இயங்குகிறது. நன்றாக அரியப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கோலுக்கு இன்னொரு வயிறு உண்டு. இதேபோல நாலாவது வயிறுக்கும் இன்னொரு பணியுண்டு. இதன் விளைவாகத்தான் ஊட்டச்சத்து செறிந்த இன்சுவைப் பால் கிடைக்கிறது. எமது நவீன விஞ்ஞானிகளின் நுணுக்கமான தொழில் நுட்ப முறையினாற்கூட சாதிக்க முடியாத ஒரு அரிய சாதனை.

உங்கள் கண்களை அகல திறந்து பாருங்கள். இப்பூவுலகம் முழுவதும் கர்த்தரின் எல்லையில்லா ஞானத்திற்கு சான்று பகர்வதைக் காண்பீர்கள்.



# இறைவன் மகத்தானவர்......

இவ்வுலகம் 700,000 கோடி எடையுள்ளது எனக் கூறப்படுகிறது. இதில் எண்ணற்ற சக்திகளும், பொருட்களும், உயிரினங்களும் நிறைந்துள்ளன. வண்டினங்கள் மாத்திரம் 50,000 வகைப்படும்; சமுத்திரங்களில் 10 இலச்சத்திற்கும் அதிகமான வகையினைச்சேர்ந்த உயிரினங்கள் காணப்படுகின்றன: எத்தனை வகைப்பட்ட மலர்களும் தாவரங்களும் உள்ளன என்று இன்னமும்கூட; கணக்கிட்டு முடியவில்லை.

இப்புவியின் பரப்பளவில் முக்கால் பங்கு கடலாகும். விண்ணில் தவழும் மேகக் கூட்டத்திலும் அதேயளவு நீர் காணப்படுகிறது. பூமி முழுவதிலுமுள்ள மலைப்பிரதேசங்களில் புல் பூண்டுகள் காணப்படுகின்றன. உயிரூட்டும் உணவைத் தருவதற்காக, மண்ணானது தொடர்ந்து தன்னை வளப்படுத்திக்கொள்கிறது. நாம் வாழும் வளிமண்டலம் புவியிலிருந்து பல்லாயிரம் மைல் உயர்ந்து காணப்படுகிறது. எனினும் கடவுள் தந்த விண்வெளியில் மாற்றம் இல்லை. ஆண்டுதோறும் மாறி மாறி வரும் இரவையும் பகலையும் பருவ காலங்களையும் ரசித்து மகிழ்கின்றோம். பூமி எதிலுமே தொங்கிக்கொண்டிருக்கவில்லை. இருந்தபோதிலும் இறைவனின் சட்டத்தைப்போல அதுவும் உறுதியாகவேயுள்ளது.

எமக்கு மிகவும் அண்மையிலுள்ள கிரகணம் சந்திரலோகம் ஆகும். இரவிரவாகத் தனது எழில் வதனத்தில் பற்பல வடிவத்தைக் காட்டி எம்மைக் கிறங்க வைக்கும் விநோதமான ஒரு அழகுப் பிம்பம். நித்திராதேவியின் இதமான அரவணைப்பில் மயங்கியிருக்கும் மாநிலத்தின்மீது தன்னொளி பொழிகிறது இந்த வெண்ணிலவு. அதன் ஈர்ப்புச் சக்தியானது கடலைக் கொந்தளிக்கச்செய்து அதன் கரையிலுள்ள கறைகளையகற்றி சுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்குகின்றது; தண்ணீருக்கும் பிராண வாயுவை யூட்டுகிறது தனக்கென தனியான ஒரு ஒளியைக்கொண்டிராத தண்ணிலவு, கதிரவனிடமிருந்து பிரகாசத்தைப்பெற்று அதனை மண்ணுலகுக்கு வழங்குகிறது. எவ்வளவு அழகான ஒரு ஏற்பாடு!

கதிரவனைப் பாருங்கள். இது விண்ணுலகில் முடிவேயில்லாமல் சுவாலித்துக்கொண்டிருக்கும் ஒரு தீப் பிளம்பு. என்றாலும் அது ஒருபோதும் எரிந்துப் போவதில்லை. புவியைவிட பத்து இலட்சம் மடங்குப் பெரிதாகவுள்ள இந்த அக்கினிக் கோளம் எமக்கு ஒளியையும் வெப்பத்தையும் உயிரூட்டும். கதிர்களையும் வழங்குகிறது. கதிரவனைப் பற்றிய மர்மம் இன்னமும் விளக்கப் படாமலேயே உள்ளது. எனினும் இது ஒரு மகத்தானப் பணியைப் புரிகிறது.

இன்னும் சற்று அப்பால் நோக்கிப் பாருங்கள். தாரகைகளைக் காண்பீர்கள். அங்கே கோடானுகோடி நட்சத்திரங்கள் ஒழுங்காக, சீரான கட்டுப்பாட்டுடன் இயங்கி வருகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை பூமியைவிடப் பெரியவை ஆதலால் இவற்றை எதற்கும் ஒப்பிடக்கூட முடியாது. இந்நட்சத்திரங்களின் முன்னால் பூமி ஒரு சிறு துரும்பு என்றே கூறவேண்டும்.

பால் வீதி என்னும் நட்சத்திரக் கூட்டங்களில் இறைவனின் சர்வலோகங்களும் அடங்கியுள்ளன அல்லவா? நட்சத்திரங்களின் தொகை எண்ணிலடங்கா. ஒரு சில நட்சத்திரங்கள் முழு அண்டசராசரங்களையும் உள்ளடக்கக்கூடிய அளவு பெரியவை எனக் கூறப்படுகிறது.

இவ்வுலகைப் படைப்பதே ஒரு மகத்தானப் பணி. படைத்த அந்த உயிரைக் காப்பது அதனிலும் மகத்தானது. இறைவன் புற்பூண்டுகளையும் படைத்துள்ளார்; பறவைகளையும், பட்சிகளையும் படைத்துள்ளார்; விலங்குகளையும் மீனினங்களையும் படைத்துள்ளார். அத்துடன் இவற்றிற்கே இயல்பான தன்மைகளையும் உருவாக்கியுள்ளார் பறவைகள் கூடுகின்றன, குஞ்சு பொறிக்கின்றன; மீனினங்கள் பல்கிப் பெருகுகின்றன. இவை அனைத்தும் இறைவனுடைய வல்லமையினாலேயே நிகழ்கின்றன. இறைவனுடைய அனுமதியின்றி எந்தவொரு இதயமும் துடிப்ப



தில்லை; இறைவனுடைய சித்தமின்றி எந்த ஒரு உயிரும் உற்பத்தியாவதில்லை. அனைத்தும் இறைவனுடைய திட்டத்தின்படியே செயல்படுகின்றன.

சற்று ஆழமாக சிந்தித்துப் பாருங்கள், கோடானுகோடி விதத்தில் தமது ஞானத்தை வெளிப்படுத்திய இறைவனுக்கு நோக்கம் எதுவும் இல்லாதிருக்குமா? அதாவது மனிதனுக்காக இத்தனை இயற்கை அமைப்புக்களையும் வகுத்துக்கொடுத்த இறைவனுக்கு மனிதனைப்பற்றிய ஒரு திட்டம் இல்லாதிருக்குமா?

இதற்கு வேறெந்த விடையும் இல்லை. இறைவனின் வல்லமையினதும் ஞானத்தினதும் பலாபலனே அவரது திட்டமாகும். இவை யாவற்றிற்கும் ஒரு நோக்கமுண்டு. அந்த நோக்கத்தைக் கண்டுகொள்வது எமது மகத்தான பொறுப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் தந்த நூல்......

இறைவன் தமது சித்தத்தை வெளிப்படுத்துகின்றார் என்று நாம் எதிர்பார்ப்பது நியாயமானதே. அவர் எல்லாம் வல்லவர். சகலத்தையும் படைத்து, பேணிக் காப்பவர். இவ்வுண்மையை நாம் விசுவாசிக்கின்றோம். ஆகவே அவர் தம்மைத் தம் படைப்புக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

இறைவனால் இதனை எப்படிச் செய்ய முடியும்? தாரகைகளைக் கொண்டு எழுத்தில் வடித்துக் காட்டுவாரா? அல்லது இடி முழக்கத்தின் மூலமாக மொழிவாரா? அல்லது தம் சித்தத்தில் கொண்டுள்ள நோக்கங்களையடக்கிய ஒரு நூலைப் படைத்துத் தருவாரா?

வேதாகமமே இறைவனின் வார்த்தை என்பதனைக் கோடானுகோடி மக்கள் விசுவாசித்துள்ளனர் ஜீவனுள்ள வார்த்தைகளாக, ஒளியின் எழுத்துக்களாக, அன்பின் செய்தியாக இது இருப்பதைக் கண்டுகொண்டுள்ளனர். வாழ்க்கையைப் பற்றியதும் மரணத்தைப் பற்றியதுமான சிக்கலான எல்லாப் பிரச்சினைகளுக்கும் இதுவே பூரணமான விடை என்பதனைக் கண்டுகொண்டுள்ளனர். இதற்குச் சாட்சியங்கள் உண்டா?

இருக்கவே வேண்டும். வேதாகமம் இறைவனால் எழுதப்பட்டிருப்பின் அவரால் எழுதப்பட்டமைக்கான ஆதாரங்களை ஏராளமாகக் காண்போம். இதன் பக்கங்களுள் தேடித் துருவிப் பாருங்கள். செம்மையாக அலசி ஆராய்ந்து பாருங்கள். இச் செய்கையை வேதாகமும் வரவேற்கும், நீங்களும் பயனடைவீர்கள்.

இந்நூலின் அற்புதமான அமைப்பைப்பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா? இதனை அமைப்பதற்கு 1600 ஆண்டுகளுக்குமேல் செலவாயின. இதனை எழுத்தில் வடித்த



மனிதர்கள் அநேகர். எனினும் ஒருவர் எழுதியது மற்றவருக்குத் தெரிந்திருக்கவில்லை. இதனை எழுதியவர்களுள் ஒரு சிலர் மன்னர்கள், சிலர் மீனவர்கள்; மற்றும் சிலர் மந்திரிகள், மருத்துவர்கள், ஆயர்கள், அரசியல்வாதிகள். இது எழுதப்பட்ட மொழிகள் வேறுபட்டிருந்தன; நாடுகள் வேறுபட்டிருந்தன; எழுத்து நடை வேறுபட்டிருந்தது. ஆனால் இன்று இந்த 66 நூல்களையும் அவதானித்துப் பாருங்கள். ஒரு நூலைப் போலவே தோன்றுகின்றது. இம் மகத்தான நூலுக்குரிய பெருமையை இறைவனுக்கு வழங்காமல், இச்சான்றுகளின் அற்புதத்தை ஆராயப்புகுந்தால் இந்நூலுக்கு விரோதமாகவே செயல்படுவீர்கள்.

வேதாகமம் தனக்கே உரித்தான உட்பொருளைப்பற்றிக் கூறுகிறது. இதனைச் சுதந்திரமாகவும், தெளிவாகவும் கூறுகிறது. வேறு எங்குமே காணக் கிடைக்காத விடயங்களைப் பற்றிக் கூறுகிறது. உதாரணமாக, பிசாசின் தோற்றத்தையும் வரலாற்றையும் அதன் விதியையும் பற்றி வேறெங்கும் காண முடியுமா. வரவிருக்கும் இறைவனின் மகத்தான விண்ணரசின் விளக்கத்தை வேறெங்கு காணமுடியும்? இறைவனைப் பற்றியும், அவரின் திட்டம், நோக்கம், அவருக்கும் வான தூதருக்குமிடையிலான உறவு, அவரது உரையாடல், உலகப் படைப்பு என்பவற்றைப் பற்றியும் அதிகாரப்பூர்வமான தகவல்களை வேறு எங்கு பெற முடியும்?

இவை அனைத்தையும் வேதாகமம் மிகவும் எளிமையான மொழியில் எமக்கு எடுத்து இயம்புகிறது. மர்மமான மறைமொழிகள் இதில் இல்லை. விளங்காத வார்த்தைகள் இல்லை. எவரும் எளிதில் இதனை விளங்கிக் கொள்ளலாம். நீங்களும் விளங்கிக் கொள்ளலாம்.

வேதாகமம் இவ்வளவு காலமாக பாதுகாக்கப்பட்டு வருவது ஒரு புதுமையே. இது ஒரு புராதன நூல். இதன் ஒரு சில பகுதிகள் 3500 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டவை. ஆனால் இன்றும் மிகுந்த செல்வாக்குடன் மிளிர்கிறது; கால வெள்ளத்தால் அள்ளிச் செல்லப்படாது புதுப் பொலிவுடன் திகழ்கிறது; எதிரிகளின் எதிர்ப்பையும் பகைவர்களின் பாராமுகத்தையும் பொருட்படுத்தாது வெற்றிப் பெருமிதத்துடன் வீற்றிருக்கின்றது. இதனை முற்றாக ஒழித்து விடுவதற்கு நாடுகளும் தனி நபர்களும் சதி செய்த பொழுதிலும் இன்னும் இது முழு உலகிலும் தன்னிகரற்ற, தலை சிறந்த நூலாக வாழ்ந்து கொண்டிருக்கிறது.



24973

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட இறை வாக்குகள் நிறைவேறிய அற்புதத்தை அவதானித்துப் பாருங்கள். இது வேதாகமத்திற்கே உரித்தான ஈடிணையற்ற ஒரு சிறப்பம்சமாகும். இதில் உரைக்கப்பட்டுள்ள இறை வாக்குகள் மறை பொருட்களை உணர்த்தும் மர்ம மொழிகள் அல்ல, ஆனால் திட்டவட்டமானவை; விளக்கமானவை; உதாரணமாக, கிறிஸ்துவின் முதலாம் வருகையைப் பற்றிய இறை வாக்கைக் குறிப்பிடலாம். இதைப் பற்றிய சுமார் 300 இறைவாக்குகள் உரைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இவை, கிறிஸ்துவின் பிறப்பு, பிறப்பிடம், அவரது பிறப்பின் சந்தர்ப்பச் சூழ்நிலை என்பவற்றைப் பற்றியதாகும். அவரது பணியின் மகத்துவம், அவர் மரணிக்கும் விதம், அவர் காட்டிக்கொடுக்கப்படுவதற்குப் பிரதியுபகாரமாக வழங்கப்படும் வெள்ளிக் காசுகளின் தொகை என்பனகூட திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த இறைவாக்குகள் யாவும் ஒருவரையே மையமாகக்கொண்டு முழுமையாக நிறைவுபெறுவது ஆச்சர்யத்துக்குரிய தொன்றாகும். எனினும் இக்கேள்விக்கு ஒரே யொரு விடைதான் உண்டு. அதாவது இந்நூல் இறைவனின் உள்ளம் என்பதாகும்.

இந்நூலின் படிப்பினை மக்களுடைய சீவியத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். இது "நன்னூல்" என்று கூறப்படுவதற்குக் காரணமில்லாமலில்லை. மனிதனை உயர் நிலைக்கு உயர்த்தி உன்னத இலட்சியங்களை உணர்த்தும் உத்தமமான சக்தி இதற்குண்டு. வாழ்க்கைப் பிரச்சினைகளினால் சிக்குண்டு தவிக்கும் மக்களை உய்விக்கும் இந்நூலின் வல்லமையை நம் அன்றாட சீவியத்தில் கண்டுகொள்ள முடிகிறது. குடிகாரன் அடக்கமான ஒரு மனிதனாக மாறுகிறான்; விலைமாது புனிதமான ஒரு புது வாழ்க்கைக்குத் திருப்பப்படுகிறாள். கொலைகாரன், இறைவன் முன்னிலையில் தன் பாவத்துக்குப் பரிகாரம் கேட்டு, நல்லவனாக மாறுகிறான். இதற்கு ஆயிரமாயிரம் சான்றுகளுள்ளன. வேறெந்த நூலிலும் காணப்படாத, மக்களின் வாழ்க்கையையே மாற்றியமைக்கக்கூடிய சிறப்பம்சம் இந்நூலில் என்னவுண்டு?

இந்நூல் உன்னதமான ஒருவரைப் பற்றியதாகும். அந்த ஒருவராகிய இயேசு கிறிஸ்துவை வர்ணிக்கும் வார்த்தையே வேதாகமம். வரலாற்றின் ஏடுகளில் சித்தரிக்கப்படும் தன்னிகரில்லாத தனிப் பெரும் தலைவர் இவரே. இவர்தான் இறைமகன். வேதாகமத்துக்குக் கிறிஸ்துவைப் பற்றி எப்படித் தெரியும்? வேதாகமம் என்னும் ஓவியத்தை வரைந்தவர் கர்த்தர் என்பது இதிலிருந்து தெரிகிறதன்றோ?



# இறைவனின் நூலே இறைவனின் திட்டம்

உலகில் நிலவும் சகலவிதமான ஒழுங்கு விதிகளுக்கும் ஆதி காரணர் எம் கர்த்தர் என்பதற்கு சந்தேகமில்லை. எம்மைச் சுற்றிலும் நாம் காணும் அனைத்தும் இதற்குச் சிறந்த சான்றுகளாகும். இங்கே அமைப்பு முறை உண்டு; சமநிலை உண்டு; தொடர்ச்சியான செயற்பாடு உண்டு; இவ்வையகத்தின் வரலாறு வறையறையின்றி வளர்ந்துகொண்டே செல்வதற்கு ஏற்ற வகையில் கர்த்தர் வழி வகுத்துள்ளார்.

மண்ணுலகும் விண்வெளியும் பெருஞ் சிக்கலான ஓர் அமைப்பிற்குள்ளும் அணுவளவும் தப்பாமல் நுணுக்கமாக செயற்படும் விந்தையை நோக்குமிடத்து இவ்வுண்மை நமக்குப் புலப்படுகிறதன்றோ? உதாரணத்துக்கு உங்கள் நாசியை எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் முகத்துக்கு தனி அழகைத்தரும் ஒரு உறுப்பாக மட்டுமா அது விளங்குகிறது? இன்னும் எத்தனையோ விதத்தில் பயன்படுகிறதன்றோ? மென்மையான உங்கள் சுவாசப் பைக்குச் செல்லும் காற்றை நாசி சூடாக்குகிறது; உணவை இனம்காண உதவுகிறது; வாயில் உமிழ் நீர் ஊறுவதற்கும் இரைப்பையின் நீர் சுரப்பதற்கும் சமிக்கை கொடுக்கிறது; உங்கள் உணவை சுவைக்க உதவுகிறது.

இத்தனை பயன்களைக்கொண்ட உங்கள் நாசி, மேல்நோக்கி அமைந்திருப்பின் எப்படியிருக்கும் என்று சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்! மழை நாளில் இன்னும் வேடிக்கையாக இருக்குமன்றோ? தடிமல் வந்து நாம் அடிக்கடி தும்மும் பொழுது ... கற்பனைபண்ணிப் பாருங்கள்! என்ன விநோதமாக இருக்குமென்று பாருங்கள். இந்தச் சிறிய உறுப்பைக்கூட கர்த்தர் எவ்வளவு நுணுக்கமாக அமைத்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்வெளியைச் சற்று அன்ணார்ந்து பாருங்கள். எத்தனை கோடி கிரகணங்களை அங்கு காண்கிறோம். அவையனைத்தும் ஓய்வு ஒழிச்சலின்றி அசைந்துகொண்டிருக்கின்றன. ஆனால் அவற்றின் அசைவில் அணுவளவேனும் பிசகுவதில்லை.

இந்த ஒழுங்குகள் அனைத்துக்கும் காரணகர்த்தர் ஒருவர் இருக்கின்றார்.

கர்த்தரின் திட்டமே கர்த்தரின் நூல்.

இவ்வளவு சிக்கல் நிறைந்த பிரமாண்டமான இந்த லோகத்தைக் கர்த்தர் காரணம் எதுவுமின்றி படைத்திருப்பாரா?

வேதாகமம் என்றழைக்கப்படும் இந்நூலைப்பற்றி சற்றுச் சிந்தித்துப்பாருங்கள். இந்நூல் மனிதனை சிந்தித்து செயல்படத் தூண்டுகிறது. இந்நூலை நல்ல மனதுடன் படித்த எவருமே ஏமாற்றமடைந்ததில்லை.

இந்நூலின் திட்டம் சிக்கலானதல்ல. மாறாக, பல சுவையான விஷயங்கள் இதில் அடங்கி உள்ளன; பல்வேறு வழிவகைகள், முறைகள் இதில் காட்டப்படுகின்றன, வெறுமனே சட்டத் தொகுப்புகளோ, ஒழுக்கவியல் முறைகளோ, உண்மைச் சம்பவங்களோ மாத்திரம் அடங்கிய ஒரு நூல் அல்ல, வேதாகமம். விருவிருப்பான வரலாறும் கச்சிதமான பல மொழிகளும், எழுச்சி தரும் பாடல்களும் படிப்பினையூட்டும் கவிதையும், அதிகாரப் பூர்வமான எச்சரிக்கைகளும், அருமையான அறிவுரைகளும், இறைவாக்குகளும் இதன் ஏடுகளில் நிறைந்துள்ளன. வேதாகமத்தை சலிப்புத்தட்டாமல் வாசித்துக்கொண்டே போகலாம். வாசித்துத் தீர்ந்துபோகாத தன்மை அதற்குண்டு, எந்தவொரு பகுதியையும் திறந்து வாசியுங்கள். மனதில் ஓர் எழுச்சியும், அதே வேளையில் ஓர் அமைதியும் பிறக்கும்.

எனவே கர்த்தரின் திட்டம் இந்நூலில் மறைந்திருக்கவில்லையா? வாழ்க்கை என்றால் என்ன என்ற இரகசியத்தின் மூலதாரம் இந்நூலில் இல்லையா? காலவெள்ளத்துக்கும் நித்தியத்துக்கும் விடைட்யளிக்கின்றது-



என்னைப் பொறுத்தளவில் வேதாகமம் எனக்குப் பூரண மனத் திருப்திதரும் விடை அளிக்கிறது. வாழ்க்கையின் முழு நோக்கமும் இங்கே பிறதிபலிக்கின்றது. கர்த்தரின் முழுத் திட்டத்தையும் விளங்கிக்கொண்டேன் என்று கூறவில்லை. ஆனால் நாம் யார்? எங்கே செல்கிறோம்? என்ற கேள்விக்கு ஆதியந்தமான விளக்கத்தை இங்கு காண முடிகிறது.

இதே முடிவை ஏற்றுக்கொண்ட எண்ணற்ற தொகையினர் உளர். திறந்த மனதுடனும், தூய உள்ளத்துடனும் வேதாகமத்தை நாடினால் நீங்களும் இதனை உணர்வீர்கள். வேதாகமத்தை நாடிச்சென்று இதுவரை எவருமே ஏமாற்றம் அடைந்ததில்லை. நீங்களும் ஏமாற்றம் அடையப் போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டத்தின் ஆரம்பம்

கடவுளின் திட்டத்தையும் நோக்கத்தையும் நீங்கள் தனியாகவும் தனிப்பட்ட முறையிலும் தெளிவாகக் காண வேண்டும் என்பது எனது விருப்பம். இதனைச் செய்வதற்கு, வரலாற்றின் சில உண்மைகளைச் சற்று நிதானமாகக் கவனிப்போம். ஆனால் மனித வரலாற்றுக் கோணத்திலிருந்து அல்ல, வேதாகமத்தின் ஏடுகளில் வெளிப்படுத்தப்படுவதுபோல இறைவன் நோக்கும் கோணத்திலிருந்து பார்ப்போம். வேறு எந்த விதத்திலும் கடவுளின் நோக்கத்தைக் காண முடியாது.

உலகமே இல்லாதிருந்த காலம் ஒன்றிருந்தது. ஆனால் அப்பொழுது இறைவன் இருந்தார். இறைவன் திரித்துவமானவர். ஒரே கடவுள், மூன்று ஆட்கள்: பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என நாம் அழைக்கும் இம்மூன்று ஆட்களைக் கொண்டவர்தான் இறைவன். இந்த மூன்று ஆட்களும் ஒரே கடவுளாக இருக்கின்றார்கள். எவருமே இந்த இரகசியத்தைப் புரிந்துகொள்ளவில்லை. எமக்கு அநித்திய மனதைத் தந்திருக்கும் கடவுளிடமிருந்து நித்திய மனதைப் பெறும் நாள்வரை இந்த உண்மை இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது.

திரித்துவக் கடவுளுக்கு துவக்கம் இல்லை. கடவுள் எப்படித் தோன்றினார் என ஆராய முற்படுவதில் எதுவிதப் பயனும் இல்லை. ஏனெனில் கடவுளை வேறொருவர் படைத்திருந்தால் படைக்கப்பட்டவர் கடவுளாக இருக்க முடியாது. கடவுளுக்குத் துவக்கமில்லை. ஆனால், என்றென்றும் இருந்தார், என்பதனை மனிதனால் விளங்கிக்கொள்ள முடியும். ஆரம்பத்தில் கடவுள் இருந்தார்.

ஆனால் உலகிற்கு ஒரு துவக்கம் இருந்தது, அதனை இறைவன் படைத்தார் என்று வேதாகமம் (ஆதியாகமம்) கூறுகிறது. இங்கே, படைத்தார் என்ற பதத்தின் பொருள்



ஒன்றுமில்லாமையிலிருந்து உருவாக்கினார் என்பதாகும். கி. மு. 150-ம் ஆண்டுகளுக்குமுன் இந்த வார்த்தைகளை எழுதுவதற்குக் கடவுளின் கருவியாக விளங்கியவர் மோயீசன். இன்றைய அறிஞர்களுக்கு இப்புராதனக் கூற்றின் உண்மையை உணர்ந்துகொள்வதற்கு இது துணைபுரிகிறது எல்லா விடயங்களும் ஒரு சக்தியுடன் தொடர்புடையன என்றும், இன்று நான் காணும் இவ்வுலகம் கடவுளின் நம்பகமான சக்தியின்மீதே உருவாக்கப்பட்டுள்ளது. என்றும் விஞ்ஞானிகள் தெளிவாக நிருபித்துள்ளனர்.

படைப்பு எவ்வளவு காலத்துக்கு முன்பு நடைபெற்றதென்பது நமக்குத் தெரியாது. பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் என்று புவிக்கணிதவியல் கூறுகிறது. இதற்கு முரண்பாடாக வேதாகமத்தில் ஒன்றுமில்லை. கடவுள் தனித்து, எதுவித உதவியுமின்றியே உலகைப் படைத்ததாக ஆதியாகமம் குறிப்பிடுகிறது.

உலகைப் படைப்பதற்கு நீண்ட காலம் எடுத்ததா? ஆதியாகமத்தில் குறிப்பிடப்படும் ஆறு நாட்கள் நீண்ட ஒரு காலத்தைக் குறிக்கின்றதா? நாம் அப்படி நினைக்க முடியாது.

ஆதியாகமத்தில் கூறப்படும் ஆறு நாட்கள் ஒவ்வொன்றும் 24 மணி நேரத்தைக் கொண்டவையே. ஆனால் இங்கு முக்கியமானது எது? கதையின் பிரதான அம்சம் யாது?

இறைவன் லோகங்களை எப்படி உருவாக்கினார் என்று வேதாகமம் கூறவில்லை. பிரமாண்டமான இந்த லோகத்தை உருவாக்க எத்தனை நாட்கள் சென்றன என்பதும் குறிப்பிடப்படவில்லை. கடவுள் படைத்தார் என்று மட்டும்தான் கூறுகிறது.

ஆதியாகமம் 1 : 2-ல் ஒரு விநோதமான உண்மையைக் காண்கிறோம். "பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்தது."

வெறுமையான, ஒழுங்கில்லாத உலகை இறைவன் படைப்பாரா என்ற கேள்விதான் உங்கள் மனதில் உதிக்கின்றது ஏசாயா 45 : 18-ல், இறைவன் பூமியை "வெறுமையாய்"

கொழும்பு தமிழ்ச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்

இருக்கும்படி சிருஷ்டிக்கவில்லை என்று கூறியதாக இறைவாக்குநர் உரைக்கின்றார். இதிலுள்ள மறைபொருள் என்ன?

உலகில் நன்மையின் சக்தியும், தீமையின் சக்தியும் இருப்பதை நாம் அறிவோம். தீமையின் சக்தியை பிசாசு என்கிறோம். ஜென்மப் பாவம் பிசாசுடன் சம்பந்தப்பட்டது. அவனுக்கு இறைவன் வழங்கிய தீர்ப்பு ஆரம்ப கால உலக அழிவுடன் சம்பந்தப்பட்டது.

எனவே ஆதியாகமம் 2-ம் வசனத்துடன் ஆரம்பமாகும் கூற்று ஆரம்பப் படைப்புடன் சம்பந்தப்பட்டதல்ல; மறு படைப்பையும், புனர் நிர்மாணத்தையும் பற்றியது. தமது மற்றெல்லாப் படைப்புகளையும்போல இறைவன் இவ்வுலகையும் தூய்மையானதாகவே படைத்தார். இப்புனிதமான கட்டத்தில் தான் சாத்தானின் பாவம் தலையிடுகிறது. பாவம் தலைகாட்டவே, உலகின்மீது தீர்ப்பிட வேண்டிய நிலை இறைவனுக்கு ஏற்படுகிறது. ஆரம்பத்தில் லுசிபர் என்றழைக்கப்படும் பேர்வழி சாத்தானாக, பொய்மை இளவரசனாக மாறுகிறான். எழில் நிறைந்த உலகில் இருள் ஆழ்கிறது, உயிர்கள் யாவும் உறங்கிப் போகின்றன.

இம்மரணத்தின் உறக்கம் உலகில் எவ்வளவு காலம் நீடித்ததென்று எமக்குத் தெரியாது. நாளடைவில் இறைவன் உலகினைப் புனருத்தாரணம் செய்து விழித்தெழுந்து புத்துயிர் பெறப்பண்ணினார்.



# பாவம் நுழைகிறது......

பாவம் ஆதாம் ஏவாளுடனோ, ஏதேன் தோட்டத்திலோ உருவாகவில்லை. மாறாக, கணக்கிடமுடியாத காலத்துக்கு முன்னர் தேவதூதர்களின் தலைவன் ஒருவன் தனக்குக் கடவுளால் அருளப்பட்ட அந்தஸ்தை ஏற்க மறுத்தபோதுதான் பாவம் உண்டாயிற்று. தேவ தூதர்கள் மத்தியில் போராட்டம் ஒன்றை ஏற்படுத்திவிட்டால் தான் மிக உயர்ந்த ஒரு பதவியை வகிக்கலாம் என இத் தலைவன் திட்டமிட்டான். ஏசாயா *14:12-17*, எசேக்கியேல் *28:11-19* ஆகிய பகுதிகளைக் கவனமாக வாசிப்பீர்களானால் இப்போரைப் பற்றி அறிந்துகொள்ளலாம்.

இறைவன் பிசாசைப் படைத்தது உண்மையே. ஆனால் அவனை, அவன் இன்றிருக்கும் நிலையில் படைக்கவில்லை. இறைவனின் மிகப் பிரதான எதிரியாக விளங்கியவன், அறிவும் ஆற்றலும் படைத்த அழகிய ஒரு சிருஷ்டியாகவே படைக்கப்பட்டான். எனினும் அவனது மனதின்படியே அவன் வீழ்ச்சியடைந்தான். அவன் எப்படியிருக்கவேண்டுமென இறைவன் விரும்பினாரோ அதற்கு எதிராகவே தானிருக்க வேண்டும் என அவன் விரும்பினான். எனவே அவன் தனது மனச்சாட்சிக்கு விரோதமாக, தன்னைப் படைத்த இறைவனுக்கு விரோதமாக, அவரின் தெய்வீகத் தன்மைக்கு விரோதமாக தனது உயர்வை நாடினான். இதன் விளைவாகவே ஒளியும் எழிலும் படைத்த லுசிப்பர் மனிதனை ஏமாற்றும் பாம்பாக, இன்று நாம் அழைக்கும் பேயாக, பிசாசாக மாறினான். எனினும் அவனது ஆசை அடங்கிவிடவில்லை; எண்ணம் மாறிவிடவில்லை; மர்யை மறைந்துவிடவில்லை. மனிதனை ஆட்கொள்ளவே விழைகிறான். இன்றும் அவனது செயல்கள் அப்பட்டமாக்க் காணப்படுகின்றன;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலக்கிரமத்தில் இறைவன் உலகை புனருத்தாரணம் செய்தார். திட்டமிட்டபடி ஒரு புதிய சந்ததியை உண்டாக்கினார். அக்களிப்புடன் வாழ்வதற்கு அவசியமான அத்தனையையும் அதில் படைத்தார். சிங்காரத் தோப்பைப் படைத்தார். நீரில் வாழும் மீனினங்களைப் படைத்தார்; பறந்து செல்லப் பட்சிகளைப் படைத்தார்; வன விலங்குகளைப் படைத்தார்; இவையாவும், இறைவனின் சித்தத்தை நிறைவேற்றவரும் ஒரு புதிய தலைவனின் விருப்பத்திற்கே படைக்கப்பட்டன.

தாழ்ந்த நிலையிலான விலங்கினங்களை உருவாக்கியபின், இறைவன் திரித்துவத்துடன் ஆலோசனை செய்து தமது சாயலிலேயே மனிதனையும் படைக்கச் சித்தமானார். இறைவனின் சாயலில் படைக்கப்படின் விவேகத்திலும் பகுத்தறியும் தன்மையிலும் பங்குகொள்ளவேண்டும். இறைவனைப் போலிருப்பதற்கு ஆவி, ஆன்மா, உடல் ஆகிய மூன்று அம்சங்களும் இருக்கவேண்டும். எனவேதான் ஆதாமும் ஏவாளும் இறைவனது கரங்களினாலேயே உருவாக்கப்பட்டனர். ஆச்சர்யத்துக்குரிய விதத்தில் அமைந்த மனித உடலை உருவாக்கியபின் இறைவன் அவனது நாசியின் ஊடாக சுவாசத்தின்மூலம் தமது உயிரை அவனுக்கு அளித்தார். மனிதன் உயிர்பெற்றான். இதுதான் மனித குலத்தின் ஆரம்ப அதிகாரம்.

ஆதாம் ஏவாள் ஆடைகள் அணிந்திருக்கவில்லை, அதற்கான அவசியமும் இருக்கவில்லை. காலநிலை கச்சிதமாகக் கனிந்திருந்தது. அவர்களது மனம் வெண்பனியைப் போல் தூய்மையாயிருந்தது. சிங்காரத் தோட்டம் முழுவதும் அவர்களிடையே இருந்தது. அவர்களது கீழ்ப்படிதல் சுலபமாகவும் இனிமையாகவும் இருப்பதற்குக் கடவுள் தமது வல்லமைக்கு உட்பட்ட சகலத்தையும் செய்திருந்தார்.

ஆதாமும் ஏவாளும் ஒருவருக்கொருவர் துணையாக இருந்தனர். அவர்களது மனம் தூய்மையாயிருந்தது. பாவத்தின் விளைவை கடவுள் அவர்களுக்கு விளங்கப்படுத்தியிருந்தார். அவர்களுடைய கைகளுக்கும் போதிய வேலை கொடுத்திருந்தார். தமது சிருஷ்டிகள் தம்மை நேசிக்கவும் சேவிக்கவும் வேண்டுமென கர்த்தர் விரும்பினார். ஏனெனில் இதுவே வாழ்க்கையின்



மகத்தான இலச்சியம். ஆனால் அந்த அன்பில் தவறுவதற்கு வாய்ப்பில்லாவிட்டால், கர்த்தரை நேசிப்பதற்கு வாய்ப்பிருக்காது. கர்த்தரை சேவிப்பதா வேறொருவரை சேவிப்பதா என்று தெரிவுசெய்யும் அதிகாரம் இருந்தாலொழிய மனிதன் கர்த்தரை தனது உள்ளத்திலிருந்து சேவிக்க முடியாது. தோட்டத்திலிருந்த விருப்பத்தின் விருட்சம் மனிதனுடைய பகுத்தறிவுக்கு ஒரு அத்தியாவசியமான சோதனையாகும். எனினும் தனது விருப்பத்தைத் தானே தெரிந்துக்கொள்ளட்டும் என்று கர்த்தர் தெரிவை மனிதனிடமே விட்டுவிட்டார்.

இறைவனை வெறுக்கும் பிசாசு முடியுமானால் அவரின் ஒவ்வொரு நோக்கத்தையும் முறியடிக்கும். இங்கே ஒரு புதிய திருப்பம் ஏற்படுகிறது. ஏனெனில் இறைவன் ஒரு புதிய சந்ததியைச்சேர்ந்த சிருஷ்டிகளை இங்கு உருவாக்கியுள்ளார். இறைவனின் திட்டத்தை முறியடிப்பதே பிசாசின் நோக்கமாகும். எனவே ஒரு பாம்பின் உருவத்தைப்பெற்று ஏவாளினதும் பின்பு ஆதாமினதும் மனங்களில் இறைவனின் நன்மையைப்பற்றிய சந்தேக வித்தைத் தூவி விடுகிறான். இறைவன் தமது நன்மைத் தன்மைகளில் சிலவற்றை தம்மகத்தே தடுத்து வைத்திருக்கின்றார் என்று அவர்களுக்கு உணர்த்தி, தனது மனதின் வஞ்சகத்தை வெளிப்படுத்துகிறான்.

கதை இங்கு சோகமாக மாறுகிறது. இறைவன் தங்களுக்குச்செய்த அத்தனை நன்மைகளையும் பொருட்படுத்தாமல், அவருக்கு எதிராக ஏவாளும், ஆதாமும் பாவம் செய்கிறார்கள். இறைவனின் சத்தியத்தைவிடுத்து இவர்கள் பசாசின் பொய்மையைப் பின்பற்றுகிறார்கள். இறைவன் பல முறையும் விடுத்த எச்சரிக்கையைப் புறக்கணித்து இறைவனின் உண்மைக்குப் பதிலாக பிசாசின் பொய்மையை நம்புகின்றனர்.

இதன் விளைவாக, மனதில் துயரடைந்த இறைவன் தாம் இவர்களுக்கு எச்சரிக்கையாக விடுத்திருந்த தீர்ப்பை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகிறார். முதல்முதல் இவர்கள் இறைவனுடன் கொண்டிருந்த சுத்த இனிமையான உறவை இழக்கிறார்கள். அவர்களது உள்ளத்தில் இருள் சூழ்கிறது. இவர்களின் கதையே மாறுகிறது. முடிவு வாழ்வல்ல, மரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
24973

# பாவம் துயரம் தருகிறது

வாழ்க்கைப் போராட்டத்துக்குக் காரணமாயமையும் சக்திகள் இப்பொழுது புரிகின்றனவா? உங்களைச்சுற்றித் தென்படுகிற பாவத்துக்கும் தாழ்வு நிலைக்கும் காரணம் புரிகிறதா?

பாவம் செய்ததன்மூலம் பாவியாக மாறியவன் ஒருவனே. அவன்தான் ஆதாம். ஆதாமுடைய புத்திரர்கள் அனைவரும் பாவம் செய்கிறார்கள். ஏனெனில் ஏற்கனவே அவர்கள் பாவிகள். மனிதன் பாவம் செய்வது இயல்பு. அவன் பாவமில்லாதிருக்க வேண்டுமானால், அவனது வாழ்க்கையில் ஒரு பெரும் மாற்றம் நிகழவேண்டும். இதனை விரிவாகப் பார்ப்போம்.

மனித குலத்தின் வாழ்க்கை வரலாற்றின் ஆரம்பக் கட்டத்தில், ஆதாம், ஏவாளுக்கு இரண்டு புத்திரர்கள் பிறக்கின்றனர். ஒரு சமயம், இவர்கள் இறைவனுக்குப் பலி ஒப்புக் கொடுக்கிறார்கள். மூத்தவனான காயீன் ஒரு கமக்காரன். பழத்தைக் காணிக்கையாக அளிக்கிறான். இளையவனான ஆபேல் ஆடு மேய்ப்பவன். இவன் ஒரு ஆட்டுக் குட்டியை அளிக்கிறான். என்ன பலி ஏற்றுக்கொள்ளப்படும் என்று இறைவன் இவர்களுக்கு உணர்த்தியிருந்தார். நீங்கள் இதனைக் கவனித்தல் அவசியம். இல்லாவிடில் கதையில் அர்த்தம் இருக்காது. காயீனுடைய பலியில் இரத்தமில்லையாதலால் இறைவன் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆபேல் தனது பலியின் மூலம் தனது பாவங்களை ஏற்றுக்கொண்டு, தனது பாவங்களை மன்னிக்குமாறு வேண்டினான். ஆதலின் அவனது பலி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கதையின் இப்பகுதி, இந்தப் புவியில் முதற் பிறவிகளுடைய பிரதிச் செயலைப்பற்றியது. காயீனுடைய பலி ஏற்றுக் கொள்ளப்படாததால் அவனது மனதில் வைராக்கியம் குமுறியெழுகிறது, பகைமைத் தீ கொழுந்துவிட்டெழுகிறது. காயீனும்



ஆபேலும் வயல்வெளியில் இருக்கும்பொழுது அண்ணன் தம்பியைக் கொடூரமாகக் குத்திக் கொலைசெய்கிறான். மனித இரத்தம் முதன்முறையாய் மண்ணில் தெளிக்கின்றது.

இறைவன் காயீனைச் சந்திக்க நேரடியாக வருகிறார். கொலைகாரனுக்கு மன்னிப்பளித்து, அவன் தனது பாவத்தை அறிக்கையிட்டு, பரிகாரம் செய்வதற்கு ஒரு வாய்ப்பை அளிக்கின்றார். ஆனாலும் காயீனுடைய கல் மனம் கரையவில்லை; தனக்குத் தண்டனை கிடைப்பது நிச்சயம் என்பதனையிட்டே கலங்குகிறான். பாவம் புரிந்த மனுக்குலம் முழுவதும் இதே மனநிலையைத்தான் கொண்டுள்ளது. அனைவரும் பாவிகள்.

ஒவ்வொருவருடைய கரமும் பாவத்தாலும், வன்செயலாலும் கறைபடிந்திருக்கின்றது என்று நாம் கூறத்தேவையில்லை, அடுத்தபடியாக வருகிறது வெள்ளப்பெருக்கு. இவ்வையகத்தில் கோடானுகோடி மக்கள் வாழ்கிறார்கள். நாடெங்கும் நாகரீகம் நிலைநாட்டப்பட்டுள்ளது. கலையும் விஞ்ஞானமும் எல்லையில்லாது வளர்ந்துள்ளது. எனினும் மனித மனம் மட்டும் மாறவில்லை. மாறாக, மாசுபடிந்து முழு உலகையும் மாசுபடுத்திக்கொண்டே வருகிறது. அதுமட்டுமா, மனிதன் வாழ்க்கைச் சக்தியுடனேயே விளையாட ஆரம்பித்துவிட்டான். முழு உலகிலும் எட்டு நீதிமான்கள் மட்டுமே வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

இரக்கம் நிறைந்த தேவன் தமது அன்புப் புத்திரனை, திரித்துவத்தின் இரண்டாம் ஆளை உலகிற்கு அனுப்புகிறார்; அன்பும், ஒளியும், வாழ்வும் நிறைந்த செய்தியோடு அனுப்புகிறார். தேவனின் இந்த தூதுவருக்கு நடந்தது என்ன? படுகொலை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயேசு வருகின்றார்......

இம் மண்ணுலகின் மாபெரும் கவலை மனிதன் செய்யும் பாவமாகும். மனிதன் பாவத்தின் சிருஷ்டியாவான். அவனது பாவம் நிறைந்த இயல்பின் விளைவாகவே அவனது செயல்களும் அவ்விதம் அமைகின்றன. மனிதன் பாவியாக இருப்பதானாலும் இறைவனுக்கு எதிராக குரோத மனப்பான்மை கொண்டிருப்பதனாலுமே அவன் பாவம் செய்கிறான். ஆதலின் மனிதன் மாறவேண்டுமாயின் அவனது சூழ்நிலை மாத்திரமல்ல அவனது முழு உள்ளாந்தரமும் மாறவேண்டும்; அவனது இதயம் மாறவேண்டும்; முழு மனிதனும் ஒரு புது மனிதனாக மாறவேண்டும்.

இதைத்தான் இறைவனும் எதிர்பார்க்கின்றார். அவரின் திட்டமும் இதுதான். உலகம் உண்டாக்கப்படுமுன்பே, சர்வேசுரன் தமது ஏக குமாரனை இவ்வுலக இரட்சகராக அனுப்புவதற்குத் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் அதற்கென நியமிக்கப்பட்ட காலம் வரவேண்டியிருந்தது. 1900 ஆண்டுகளுக்கு முன்னர், இஸ்ராயேல் நாட்டில் அழகே உருவான, கற்பிற் சிறந்த கன்னிகை ஒருத்தி இருந்தாள். அவள் பெயர் மரியாள். ஒரு நாள் அவளின் முன்னாள் வான தூதன் ஒருவன் தோன்றினான் மரியாள் ஒரு குமாரனைப் பெறுவாள் என்று வான தூதன் கூறினான். ஆனால் இது இயற்கை நியதியின்படி அல்ல, பரிசுத்த ஆவியினாலேயே கர்ப்பந் தரிப்பாள் என்றும் கூறினான். பிறக்கும் குமாரன் பெரியவராயிருப்பார்; உன்னதமானவருடைய குமாரனாயிருப்பார் என மேலும் அறிவித்தான்.

காலத்தின் நிறைவில் குழந்தையும் அவனியிற் தவழ்ந்தது - மாட மாளிகையில் அல்ல, மாடடைக் குடிலில். மாதவனை



ஈன்றெடுத்த மாதரசியும் செல்வந்தன் வீட்டிற் பிறந்த ஒரு சீமாட்டியாக அல்ல, ஒரு சாதாரண பெண்ணாகவே இருந்தாள். எனினும், இம்மாடடைக் குடிலை நோக்கி மாமன்னர்கள் முதலாய் வந்து மகவைப் பணிந்து செல்லவேண்டும் என்பது இறைவனின் சித்தமாயிருந்தது.

வஞ்சக நெஞ்சம் படைத்த ஒரு மன்னன் மாத்திரம் மகவை மாய்த்துவிட சதிசெய்தான். ஆனாலும் தேவன் தமது குமாரனை கொலைஞனுடைய கொடுமையிலிருந்து பாதுகாத்துக் கொண்டார். கொடுங்கோல் மன்னனாகிய ஏரோதின் சதித்திட்டத்திற்கு இரண்டாயிரம் பச்சிளம் பாலகர்கள் பலியாயினர்.

திருக்குமாரனின் வருகையால் மனம் குளிர்ந்தவர்கள் ஏராளம். இவர்களுள் மேய்ப்பர்கள், மும்மன்னர்கள், சிமியோன், அன்னாள் ஆகியோர் அடங்குவர். வேதபாரகரோ கிறிஸ்துவின் பிறப்பை பொருட்படுத்தவில்லை. இறைவாக்கினர் இச்சம்பவத்தைப் பற்றி முன்கூட்டியே அறிவித்திருந்தபோதிலும் அனேகர் இதில் அக்கறைக்கொள்ளவில்லை. புவியிற் பிறந்த இப்பாலகன் தேவனின் குமாரனாக வளர்ந்து, முழு உலகத்தினதும் போக்கை திசை திருப்புபவராகத் திகழ்ந்தார்.

நாசரேத் ஊரைச்சேர்ந்த இயேசு தமது பால்ய பருவத்தை ஒரு சிறு கிராமத்திலேயே கழித்தார். சுமார் முப்பது வயதையடைந்தபோது தமது பகிரங்க சீவியத்தை ஆரம்பித்த இவர் இஸ்ராயேல் நாட்டில் மட்டுமின்றி, உலகமெங்கும் பிரபல்யம் அடையலானார்.

அவரது வாழ்க்கை முழுவதும் தன்னலமற்ற அன்புப் பணி புரிவதிலேயே செலவானது. நோயினால் அல்லல்படுவோரை அன்புக் கரம் நீட்டி குணமாக்கினார், மரித்தவர்களை உயிர்ப்பித்தார். ஆச்சரியத்துக்குரிய வகையில் போதனை செய்தார். அவருடைய வார்த்தைகள் மகிழ்ச்சியும் மனத்திருப்தியும் தருவனவாயிருந்தன. கடல் கொந்தளிப்பு ஏற்பட்டபொழுது அமைதியாகும்படி காற்றுக்கும் அலைகளுக்கும் கட்டளையிட்டார், அவைகளும் அடங்கிப்போயின. ஏராளமான மக்களைக் குணமாக்கினார். ஒரு இளைஞனின் ஐந்து அப்பங்களையெடுத்து ஐயாயிரம் பேருக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கிட்டார்; அவரால் இயலாதது எதுவுமே இருக்கவில்லை. அவர் தேவனின் குமாரனுவார்.

இவ்வரைப்போல வேறு எவருமே பேசியதில்லை. அவரது தொனியில் அதிகாரம் இருந்தது. இதற்கு முன்னர் எவருமே கூறுதமுறையில் பரலோகத்தைப்பற்றிப் போதித்தார். மக்கள் மனதைத் தெளிவாகப் புரிந்துகொண்டவராகப் பேசினுர். தாழ்த்தப்பட்டவர்களுக்கு தயை புரிந்தார். தமது பிதாவின் ஆலயத்தின் புனிதத்தன்மைக்குப் பங்கம் விளைவித்தவர்களை அடித்துத் துரத்திஞர்.

சாதாரண மக்கள் மகிழ்ச்சியோடு அவருக்குச் செவி மடுத்தனர். ஏராளமான மக்கள் அவரிடம் திரளாகச் சென்றனர். நாடு முழுவதும் அவரை நாடிச்சென்றது. அவரது வார்த்தைகளைக் கேட்க அநேகர் தொலைத் தூரத்திலிருந்தும் திரண்டு வந்தனர். செல்வந்தர்களையும் செல்வம் மிகுந்தவர்களையும் திருப்திபடுத்துவதில் அவர் அக்கறை காட்டவில்லை. கிணத்தடியில் சந்தித்த விபசாரப் பெண்ணுடன் இதமாகப்பேசி பாவப்பொறுத்தல் வழங்கினுர்.

தாம் தேவகுமாரன் என்பதனை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினுர். இவர் யார் என்பதனைப்பற்றிய சந்தேகத்துக்கு இடமிருக்கவில்லை. சர்வேசுரனிடத்திலிருந்து அவர் ஒரு செய்தியைக் கொண்டுவந்தார். ஆணையும், பெண்ணையும் பாவத்தின் படுகுழியிலிருந்து மீட்டெடுக்கும் பணியைப்பற்றியதே அச்செய்தி. உண்மையை எடுத்தியம்பினுல் அனைவரும் பாவிகள் என்பதனையும் பாவத்தின் சன்மானம் மரணம்—நித்திய மரணம் என்பதனையும் அதிகாரத்துடன் எடுத்துக்காட்டினுர்.

பாவச் சேற்றில் அமிழ்ந்திருக்கும் மனிதன் இரட்சிக்கப்பட வேண்டும். இப்பொழுது கடவுள் தாமே இரட்சண்யத்தைத் தருவதற்குத் தமது திருக் குமாரனை அனுப்புகிருர்.



# அவர் தம் உயிரைக் கொடுக்கின்ருர்

கிறிஸ்து மனிதனுக்குப் புரிந்த எண்ணற்ற நன்மைகளுக்குப் பிரதியுபகாரமாக மனித குலம் முழுவதும் அவரது பாதத்தில் விழுந்து அவரை வாழ்த்தியிருக்கும் என நீங்கள் நினைத்திருப்பீர்கள். ஆனுல் முற்றிலும் முரணுகவே நடைபெற்றது. அநேகமாக முழு உலகமும் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. இதனை இறைவன் முன்பே அறிந்திருந்தார்; அதற்கு வகையும் செய்திருந்தார். மனுக்குலத்தின் இரட்சண்ணியத்துக்காக மண்ணில் உதித்த தேவகுமாரனை மனிதன் மரணத்தீர்வைக்கு ஆளாக்குவான் என்று முக்காலமும் தெரிந்த இறைவனின் ஞானத்துக்கு நன்கு தெரியும். ஆதலின் உலகம் உண்டாகுமுன்பே இறைவன் மனதில் சிலுவையைப்பற்றிய எண்ணம் படர்ந்திருந்தது. எனினும் இறைவனின் செம்மறியைப் புறக்கணித்து ஒதுக்கிய மனுக்குலம் தனது பொறுப்பைத் தட்டிக் கழிப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கவில்லை.

அன்பும், பாசமும் இரக்கமும்கொண்ட அவரது மூன்றரை ஆண்டுக்கால திருப்பணியின் பின்னர் கிறிஸ்துவின் சொந்தச் சீடர்களே துரோகிகளாக மாறி அவரது உயிருக்கும் பேரம் பேசமுற்பட்டார்கள். ஒரு நாள் இரவு கிறிஸ்து இரக்கமற்ற முறையில் இந்த ஈனர்களால் காட்டிக்கொடுக்கப்படுகின்ருர்.

உலகின் பாவத்தைப் போக்கும் செம்மறிப் புருவையாக இவர் தம்மை மனமுவந்து கையளிக்கிருர். அவர் இவ்வுலகிற்கு வந்ததன் நோக்கமே இதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயவர்கள் இயேசுவைக் காரணமின்றியே கொலை செய்தார்கள், இவருக்கு எதிராக பொய்ச் சாட்சிக் கூறுவதற்கென சாட்சிகளைக் கூலிக்கு அமர்த்தினார்கள்; அவரது சீவியத்தைப்பற்றி பொய்ப் புரட்டுகளைத் திரித்துக் கூறினார்கள்; கதைகளைக் கட்டினார்கள். ஆனால் இந்த அக்கிரமங்கள் அனைத்தையும் இயேசு பிரான் அமைதியுடன் ஏற்றுக்கொண்டார். உரோமைத்தளபதி, நீதியையும் நேர்மையையும் உதாசீனம் செய்து இயேசுவை சிலுவையிலறைவதற்குக் கட்டளையிடுகிறான். இயேசு தமது சிலுவையைச் சுமந்து செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார். மூர்க்கத்தனம் படைத்த உரோமைச் சேவகர்கள் அவரது புனிதமான கரங்களையும் கால்களையும் இரும்பாணிகளால் துளைக்கிறார்கள். மன்னவனும் இயேசு மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையே தாளாத துயரத்துடன் மும்மணி நேரமாகத் தொங்கிக்கொண்டிருக்கிறார்.

ஆயினும் அவர் உலகைத் தூற்றவில்லை, சபிக்கவில்லை. தமக்கு இக்கொடும் பாதகங்களைப் புரிந்த படுபாவிகளை மன்னித்துவிட்டு, "யாவும் முடிந்தது" என்று கூறி உயிர் துறக்கிறார். என்ன முடிந்தது? இறைவனின் திட்டத்தில் ஒரு பகுதி.

அன்னையின் அன்புக் கரங்கள் அண்ணலின் உடலை சிலுவையிலிருந்து கீழே இறக்குகின்றன. எம் இரட்சகர் இறந்துவிட்டார். எனவே யூதர்களின் மரபுபடி துணிகளால் சுற்றி அடக்கம் செய்யப்படுகிறார்.

அத்துடன் அடங்கவில்லை யூதத் தலைவர்களின் தாகம். இயேசுவின் கல்லறைக்குக் காவல் வேண்டும் என்று தளபதியிடம் கூறுகிறார்கள். சடலம் கல்லரையிலிருந்து களவாக அப்புறப்படுத்தப்படாதிருக்கும் பொருட்டு பலத்த காவல் போடப்படுகிறது.

மகிமை நிறைந்த உயிர்த்தெழுதல் ஒன்று இருக்கும் என்று இறைவன் முன்கூட்டியே இறைவாக்கு உரைத்ததற்கு இணங்க வாரத்தின் முதல் நாள் பிரகாசம் நிறைந்த ஒரு வானதூதன் தோன்றி, காவல் புரிந்த சேவகர்கள் மனதில் மிகுந்த நடுக்கத்தையும் கலக்கத்தையும் உண்டுபண்ணித் தலைதெறிக்க ஓடச்செய்கிறான். பின்னர் தேவதூதன், கல்லறையின் கல்லைப் புரட்டி அதில் அமர்கிறான். கல்லறை வெறுமையாக இருப்பதை இப்பொழுது எவராலும் காணக்கூடியதாக இருந்தது.



இயேசுவின் சடலத்தைச் சுற்றியிருந்த துணிகள் இருந்தன ஓர் உடலைச்சுற்றியிருந்த அதே விதத்தில்தான் இயேசுவைச் சுற்றியிருந்த அத்துணிகள் காணப்பட்டன. ஆனால், அங்கே இயேசுவைக் காணவில்லை என்ன நடந்தது என்ற கேள்விக்கு இந்த வெற்றுக் கல்லறை தெட்டத் தெளிவாக விடைபகர்கிறது. இயேசு உயிர்த்துவிட்டார்! உலகை உய்விக்க வந்த உத்தமர் இயேசு உயிர்த்துவிட்டார்!! உலகிற்கு ஒரு புத்தொளியையும், புது நம்பிக்கையையும் பூரிப்பையும் தந்துவிட்டார்!!!

சீடர்கள் ஒருவர் ஒருவராகச்சென்று பார்த்து, நடந்ததைக் கண்டு விசுவாசித்தார்கள். அதுமட்டுமன்று; உயிர்த்த இயேசு இவர்களின் முன்னிலையில் தரிசனமாகி அவர்களுடன் உரையாடுகிறார்; அவர்களுடன் உணவருந்துகிறார்: இன்னலைப்போக்கி இன்பத்தை அளிக்கின்றார் சஞ்சலத்தைப்போக்கி சமாதானத்தை அளிக்கின்றார். உயிர்த்த இயேசுவை 500க்கும் மேற்பட்டோர் கண்டு களித்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

தமது உயிர்ப்பின் பின்னர் இயேசு அற்புதமான அனுபவத்தைத்தரும் 40 நாட்களை இவ்வுலகில் கழித்தார். அந்த நாட்களில் இவர் தமது சீடர்களுக்குப் புதிய உண்மைகளைப் போதித்தார். இவை நிலைநாட்டப்பட்ட உண்மை நிலையாகிய பலியை உணர்த்தும் புதிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. தாம் எங்கே போகிறார் என்பதையும் சீடர்கள் பணி என்னவென்பதையும் எடுத்துக்கூறுகிறார். ஒரு நாள் இயேசு சீடர்களை ஒலிவ மலைக்குக் கூட்டிச்சென்று, பூரணமாக விசுவாசிக்க முடியாத இவர்களது ஊனக் கண்கள் அவரை ஏறெடுத்துப் பார்த்திருக்க, அவர் விண்ணில் ஏறி மறைந்தார். வான் முகில் வந்து அவரை மூடிக்கொள்கிறது.

எனினும் அவர் மீண்டும் வருகிறார் வெகுவிரைவிலேயே வரக்கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய உலகுக்கு
# இறைவன் திட்டம்......

இதனை நாம் விளங்கிக்கொள்ளவேண்டியது மிகமிக முக்கியம். ஏனெனில் இன்று உலகம் பல்வேறு கூக்குரல்களைக் கேட்கிறது; முரண்பட்ட பல்வேறு திட்டங்களைக் காண்கிறது.

இறைவனின் கரங்கள் இப்பொழுது கட்டவிழ்க்கப்பட்டுள்ளன. மனிதனின் சார்பில் அவர் இப்பொழுது செயல் புரியலாம். இயேசுவின் மரணத்தையடுத்து பாவத்தின் பிரட்சினை தீர்த்து வைக்கப்பட்டுவிட்டது. தமது திருக் குமாரனின் மரணத்தையிட்டு இறைவன் பூரண திருப்தி கொண்டுள்ளார். கல்வாரி மலையில் இயேசு கிறிஸ்து புரிந்த பணியின் அடிப்படையில் படுபாவிகளைக் கூட தமது இல்லத்திற் சேர்த்துக்கொள்ள இறைவனுக்கு இப்பொழுது சுதந்திரம் இருக்கிறது – ஆனால் பாவிகளாக அல்ல, கல்வாரியில் கிறிஸ்து நிறைவேற்றிய பலியினால் தூய்மைப்படுத்தப்பட்ட புனிதர்களாக. இப்பலி, இப்பணி சம்பூரணமானது; முழுமையாக முற்றுப்பெற்றது; நித்தியமானது.

ஆதலின் கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றிய வரலாற்றை மனிதகுலம் முழுவதற்கும் அறிவிப்பதற்குத் தக்க தருணம் இதுவாகும். இறைவன், வருங்காலத்துக்கென வகுத்திருக்கும் திட்டத்தினுட் பிரவேசிப்பதற்கான நுழைவாயில் இதுவே. இறைவனின் குடும்பத்தைப் பொறுப்பேற்பதற்கான அனுமதிப் பத்திரம் இதுவே. வையகம் முழுவதற்கும் அதிமுக்கியமான ஒரு அற்புதச் செய்தி இதுவே.



எம் தேவன் விண்ணகம் ஏறிச் செல்லுமுன் விடுத்த உருக்கமான வேண்டுகோள் இதுவாகும். உலகின் கடைசிபரியந்தம்வரை சென்று மகிமை நிறைந்த இந்த நற்செய்தியை அறிவிக்குமாறு நாம் அழைக்கப்படுகின்றோம். இது ஒரு செய்தற்கரிய செயல். ஏனெனில் இந் நற்செய்தியை ஏற்றுக்கொண்ட அனைவர் மீதும் இறைவனின் அன்பு மழைப் பொழியும்; இது ஒரு செயற்கரிய செயல், ஏனெனில் இது விலையில்லாதது; இது சௌந்தரிய செயல் ஏனெனில், இது, வறியவர், செல்வந்தர், இளையவர், முதியோர், படிப்பறிவில்லாதவர்கள், பட்டம் பெற்றவர்கள் ஆகிய அனைவருக்கும் ஏற்புடையதாகின்றது,

இறைவனின் செய்தியை உலகிற்கு அறிவிக்க நாம் எமது சொந்தப் பலத்துடன் செல்வதில்லை. பெந்தகோஸ்தே தினத்தன்று ஆச்சரியத்துக்குரிய ஒரு சம்பவம் நிகழ்ந்தது. இறைவனுடைய நற்செய்தித் திருப்பணியின் பணிப்பாளர் இப்புவியினை ஆட்கொண்டார் அவர்தான் திரித்துவத்தின் மூன்றும் ஆளாகிய பரிசுத்த ஆவி. பிதா சர்வேசுரனுடையவும் சுதன் சர்வேசுரனுடையவும் அதே நிலையிலிருக்கும் பரிசுத்த ஆவி, நற்செய்திப் பணியை வழிநடத்த வந்தார். விசுவாசிகள் அனைவரினதும் உள்ளங்களில் அவர் குடிகொண்டிருக்கிறார்.

நற்செய்தியின் வரலாறு ஒரு சில சீடர்களுடன் ஆரம்பித்து இன்று உலகமெங்கும் பரவியுள்ளது. இச்செய்தி எல்லோருக்கும் கிடைக்கப்பெறவில்லை என்பது உண்மையே. ஆனால் இதனைப் பெறும் வாய்ப்பு அநேகருக்குக் கிட்டியுள்ளது. மீண்டும் பிறந்து புதுவாழ்வுபெற்ற ஆண்களையும், பெண்களையும், தமது மகத்தான இந்த மாற்றத்தை, மனித மனதில் உதித்த இந்த இரட்சிப்பின் புதுமையைப்பற்றி சாட்சியம் சொல்லுமாறு ஆண்டவரின் ஆவியானவர் தொடர்ந்து ஆணையிடுகிறார்.

இதுதான் இன்றைய வேலைத் திட்டம். மற்றெல்லாத் தொல்லைகளின் மத்தியில் அதி முக்கியமானது இதுவே. அதைவிட இப்பணிக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களின் ஏனைய விடயங்களைத் தாம் கவனித்துக்கொள்வதாக கர்த்தர் வாக்குப்பண்ணியிருக்கிறார்.

இத்திட்டத்தினுட் பிரவேசிப்பதற்கான பிரமாணங்கள் என்ன? இறைவனின் நோக்கமென்ன? எப்படி ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவியின் நிலையை விடுத்து புனிதனின் நிலையை ஏற்றுக்கொள்கிறானோ. எப்படி பகைவனின் நிலையைவிடுத்து, புதல்வனின் நிலையை ஏற்றுக்கொள்கிறானோ அதேபோல இதுவும் சுலபமானதே.

முதல் பிரமாணம் முக்கியமானவொன்றாகும். அதாவது ஒருவன் தன்னை ஒரு பாவியாக, நிராகரிக்கப்பட்டவனாக திக்கற்றவனாக, கைவிடப்பட்டவனாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவன் ஒரு பாவியாக இருக்கிறான் — அவனது சொந்த பாவங்களுக்காக மட்டுமல்ல ஆதிகாலந்தொட்டு, தலைமுறை தலைமுறையாக பாவத்தின் இயல்பு அவனுக்குக் கையளிக்கப்பட்டு வருவதால், பாவிகளை இரட்சிப்பதற்காகவே இயேசு இப்புவியிற் பிறந்தார். எனவே, நாம் பாவிகள் என்ற உண்மையை எற்றுக்கொள்ளாவிடில் எமக்கு இரச்சணியம் இல்லை. எனினும் நேர்மையானவர்களுக்குப் பிரச்சினை இல்லை.

அடுத்தபடியாக, ஒருவன் தனது கண்களை உயர்த்தி இரட்சகரைப் பார்க்க வேண்டும். இயேசு இவ்வுலகின் பாவங்களுக்காகப் பாடுபட்டு மரித்தார் என்று மாத்திரம் சிந்திக்காமல், உங்களுடையவும் என்னுடையவும் பாவங்களுக்காக மரித்தார் என்பதனை சிந்திக்க வேண்டும்.

இறைவன் மனிதரை மொத்தமாக இரட்சிப்பதில்லை. இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் தனித்தனியாகவே இரட்சிக்கப்படுகிறார்கள். கிறிஸ்துவின் மரணத்தை என்னுடைய மரணமாகக் கருதவேண்டும். அவரது கரங்களையும். கால்களையும் ஊடுருவிய இரும்பாணிகள் என்னுடைய கரங்களையும் கால்களையும் ஊடுருவியதாகக் கொள்ளவேண்டும். அவரது துயரம், பாடுகள், உடைந்த உள்ளம்யாவும் என்னுடன் தனிப்பட்ட விதத்தில் தொடர்புடையதாக இருக்கவேண்டும். கிறிஸ்து எனக்காகவே மரித்தார். இவ்வுலகில் நான் மாத்திரந்தான் வாழ்ந்திருந்தாலுங் கூட அவர் எனக்காகவே மரித்திருப்பார்.

தேவனுடைய நீதியின் முன்னால், நான் அபாத்திரனான ஒரு பாவியானேன். இயேசு கிறிஸ்து என்னுடைய பிரதியாளாக இருந்து, என்னுடைய தண்டனையைத் தாமே ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறார். இதற்கான நிபந்தனை யாதெனில், இதனை நான் விசுவாசிக்க வேண்டுமென்பதே. நான் அவரை விசுவாசிக்கிறேன்.



அவர் என்னை நேசிக்கிறார் என்பதனை விசுவாசிக்கின்றேன். அவர் எனக்காகவே மனிதனாகப் பிறந்தார். எனக்காகவேமரித்து, மீண்டும் உயிர்த்தெழுந்தார் என்பதனை விசுவாசிக்கின்றேன் என்று புதிய ஏற்பாடு மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறது.

விசுவாசிப்பது என்பது மிகவும் ஆழமானது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒருவரை விசுவாசிப்பதைப்போல் நான் இயேசுவை விசுவாசிப்பதில்லை. இயேசு கிறிஸ்துவை நான் எனது உள்ளத்தாலும், அறிவாலும் விசுவாசிக்கின்றேன். அவரை விசுவாசிப்பதென்றால் அவரை அடைந்துகொள்வதாகும் நான் அவரை என் வாழ்க்கையில் ஏற்றுக்கொள்கிறேன். நான் அவரது உற்ற நண்பனாக மாறுகிறேன். அவர் எனது வழிகாட்டியாக, பணிப்பாளராக, எனது மனவெழுச்சியாக, எனது இலட்சியமாக எனது சகலமுமாக மாறுகிறார். மற்றெவரையும்விட அவர் எனக்கு மிகவும் அருகிலிருக்கின்றார். நான் அவரின் சித்தத்தை நிறைவேற்றவே விழைகின்றேன். நான் அவரது விருப்பத்துக்கு அடிபணிகின்றேன். வாழ்க்கையை நேசிப்பதைவிட அவரை நான் அதிகமாக நேசிக்கின்றேன்.

அவ்விதம் நாம் கிறிஸ்துவை விசுவசிப்பதாலால் இறைவன் என்னுள் வந்து அவரது அற்புதமான தொடுகையின் மூலம் எனது இதயத்தை முற்றாக மாற்றவேண்டும். நான் ஒரு புதிய சிருஷ்டியாக மாறுகிறேன். நான் முன்னர் நாட்டம் கொண்டிருந்த பாவமான காரியங்களை வெறுத்துத் தள்ளுகிறேன். எனது வாழ்க்கை முற்றாகவே மாறிவிட்டது. எனது இதயம் துடிக்கும் ஒவ்வொரு க்ஷணப்பொழுதிலும் அவருக்கே சேவை செய்யத் துடிக்கிறேன். உலகின் கடைசிபரியந்தம்வரைப் போய் அவரைப்பற்றி ஏனையோருக்கு அறிவிக்க ஆசிக்கின்றேன். அவரின் திருமுகத்தைத் தரிசிக்கத் தாகமாயிருக்கிறேன். எனக்கு ஒருநாள் அவரைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவலுடனேயே என் வாழ்நாளைக் கழிக்கின்றேன்.

தேவனிடம் தனிமையாகச் செல்லுங்கள். அவர் உங்களை எதற்காகப் படைத்தாரோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற விரும்புவதாக விநயமுடன் எடுத்துக் கூறுங்கள். அவர் அழைத்திருக்கும்

கொழும்பு தமிழ்ச் சங்கம்



நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் அவரிடம் வாருங்கள். உங்களுக்கான அவரது பரிபூரணமான உள்ளத்தின் நடுவில் குடிகொண்டிருப்பதன் மட்டற்ற மகிழ்ச்சியை, மனநிறைவைக் காணுங்கள்.

இறைவனிடம் கூறுங்கள்: "நான் ஒரு நாதியற்ற, கைவிடப்பட்ட பாவி. நான் சிந்தனையாலும், செயலாலும், சொல்லாலும் உமக்கு விரோதமாக பாவம் செய்தேன். கல்வாரிச் சிலுவையில் சொரிந்த உமது திரு இரத்தத்தால் என்னைக் கழுவியருளும். எனக்காக மரித்தமைக்கு, இயேசுவே உமக்கு நன்றி. நீர் எனக்காகவே மரித்து உயிர்த்தெழுந்தீர் என்பதனை விசுவாசிக்கின்றேன்.—ஆமென்."

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

மேலதிக விபரங்களுக்கு அல்லது விசாரணைகளுக்கு எழுதவும்:

ராமன் சுப்பையா,
கிறிஸ்துவ ஐக்கிய நிலையம்,
7, விவேகானந்த ரோட்,
வெள்ளவத்தை.

24973



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org